Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300] of 1953.

விரோதிஞு (1339) ஆவணி ௴ 28 உ ஆரம்பமானது

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எச] யாழ்ப்பாணம்:- சுபகிருது ஞூ ஆனி ௴ கரு௳ வெள்ளிக்கிழமை (29 June. 1962) [இல-கஉ]

உலகியல் அலை

# சாதிமதபேதங்கடந்து மூதூரிலே

## தமிழ்வாக்காளர்பண்பு

———o———

### மூன்று தொகுதிகளிலும் முன்னிருந்த கட்சிநிலைமை

**கடுஞ் சோழகத் தேர்தற்காற்று கடுகதியுடன்வீசி மூதூர், அநுராதபுரம், வெலிமடை மூன்றிடங்களிலும் புழுதிமயமாய் இருந்த பொழுதிலு ஈற்றில் வாக்குகள் கணிக்கப்பட்டதும "இருந்தபடி இருங்கள்" என்ற தீர்ப்பு மக்களால் அளிக்கப்பட்டது குறிப்பிடவேண்டியது.**

மூதூரிலே தமிழ் வாக்காளர்கள் தேர்தற் பண்பு காட்டி இனம் மதம் என்ற எண்ணத்துக்கப்பாற் பட்டபடி பெருந்தன்மையை விளக்கிக் காட்டி வைத்தனர். கட்சிகளை விடத் தனிப்பட்டவர்களாக முன்வந்த சிங்கள அபேட்சகருக்கு நல்லாதரவு கிடைத்ததும் தமிழ் அபேட்சகர் சிறிதும் ஆதரவில்லாது தோற்றதும் விசேடமாகக் குறிப்பிடப்படவேண்டும்.

ஐ. தே. க. ஆளுங் கட்சிக்கு அநுரதபுரத்திலும் வெலிமடையிலும் எதிர்ப்பை இறுகச் செய்திருக்கின்றது. வெலிமடைவீரர் என்ற புகழ் பெற்ற திரு. இராசரத்தினவின் வெற்றி ஆளுங்கட்சிக்கு யோசனையைக் கொடுக்கும் என்பதற் கையமில்லை.

### தேர்தல் விபரம்

**மூதூர்**

| | |
|---|---|
| ஜனுப் முகம்மத் அலி (இலங்கைச் சமஷ்டிக்கட்சி) | 14215 |
| ஜனுப் எஸ். ஏ. அமீத் (சுதந்திரககட்சி) | 6903 |
| ஆர். எம். குணதிலக (சுயேச்சை) | 6040 |
| திரு. வி. சுந்தரலிங்கம் (ஈழமுன்னணி) | 423 |
| மேலதிக வாக்குகள் | 7312 |
| பழுதடைந்த வாக்குகள் | 118 |

திரு. சுந்தரலிங்கம கட்டுப் பணம் இழந்தார்.

**அநுராதபுரம்**

| | |
|---|---|
| திரு. கே. பி. ரத்னுயக்கா (சுதந்திரககட்சி) | 7797 |
| திரு. எஸ். தலுவத்த (சுயேச்சை) | 2179 |
| திரு. அசோகாமகாதியுல்விவா (யு. என், பி.) | 6373 |
| அதிகப்படியான வாக்குகள் | 1425 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 16468 |
| சேதமானவை | 120 |

**வெலிமடை**

| | |
|---|---|
| திரு கே. எம். பி ராஜரத்ன (ஜாதிகவிமுத்தி பெரமுண) தலைவர் | 8352 |
| திரு. பி. பி. ரத்னயகா (சுதந்திரககட்சி) | 2496 |
| திரு. பெர்ஸி சமரவீரா (யு. என். பி.) | 5178 |
| அதிகப்படியான வாக்குகள் | 3174 |

## நற் சிந்தனை

ஔவை உறுவை
அரியதிரு வள்ளுவரைத்
தெய்வமெனப்
போற்றுதலே சீர்.

### தவஜீவன சங்கத்தின் தியான வகுப்புக்கள்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் நாவலர் மண்டபத்தில் 29-6-62 தொடக்கம் 10-7-62 வரை யாழ்-தவஜீவன சங்கத்தின் ஆதரவில் யோகிராஜ் சுவாமி சத்திதானந்தஜி அவர்களால் ராஜ யோக தியான வகுப்புகள் நடாத்தப்படும்.

## கம்பன் கவிதையில் உணர்ச்சி வெளிப்பாடு

———:0:———

கம்பனை உலகமகா கவிகளுள் ஒருவராக, கவிச்சக்கரவர்த்திகளுள் ஒருவராக நாம் போற்றிக்கொண்டாடுகிறோம்; பேசிப் பெருமை அடைகிறோம். அந்தளவிற்குக் கம்பன் கவிதைகள் சிறப்புற்று விளங்குகின்றன. சாகாவரம் பெற்றுத் தன்னிகரற்றுத் திகழ்கின்றன.

அவர் கவிதைகளில் காணப்படும், ஓசை நயம், செஞ்சொல்லாட்சி, வர்ணனை அழகு, பண்பாட்டுயர்வு எளிமை எனப்படும் சிறப்பியல்புகளே அன்றி உணர்ச்சிகளை அற்புதமாக வெளியிடுவதற்கு வெற்றிகரமாகக் கையாளப்பட்டிருக்கும் பாணியும் கூட இத்தகைய மகிமைக்குப் பெரிதும் உதவியிருக்கின்றது.

மனித மனங்களில் — அவற்றின் உயர்ந்த நிலையிலும் சரி தாழ்ந்த நிலையிலும் சரி எழும் பலதரப்பட்ட உணர்ச்சிகளையும் அதற்கேற்ற வகையில் வெளியிடுவதற்கு அவர் கையாண்ட அந்தப்'பாணி' சாதாரணமானது. ஆனால் மிகச் சக்திவாய்ந்தது. எதுவாயினும் சரி ஓர் உணர்ச்சிவசப்பட்டு நிற்கும் ஒரு கதாபாத்திரத்தின் மன நிலையை அந்தப் பாத்திரத்தைப் பேச வைப்பதன்மூலமே மிகமிகச் சிறப்புற வெளியிட முடியும். அப்படிப் பேசும்போது பிறக்கும் வசனம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு உணர்ச்சிப்பாளமாகவே வந்து குதிக்கும். அப்படிப் பேசவைத்து உணர்ச்சியை அற்புதமாக வெளியிட வைக்கும் பாணி உரைநடையில் நாடகங்களில் சாத்தியமாகும் அளவிற்கு எதுகை, மோனை, இசை என்ற எல்லை கட்டுப்பட வேண்டிய கவிதையில் சாத்தியமாவது கடினம். ஆனல் கம்பரோ மிக இலகுவாகவும் இயற்கையாகவும்

"மயில்வண்ணன்"

## சிந்தித்துப் பார்த்தாயா?

☆

### "அளவையூர் - சஞ்சீவி"

இராகம் : பூபாளம். தாளம் : ரூபகம்.

பல்லவி

சிந்தித்துப் பார்த்தாயா — நீ (நெஞ்சே)
செய்தசெ யலெல்லாம் தீமையோ நன்மையோ (சி)

அநுபல்லவி

அந்திப்பி றையணிந் தாடும்ப ரமனை
அர்ச்சித்துச் சச்சிதா னந்தம்பெ றஉனே (சி)

சரணம்

உன்னைத்தி ருத்தாமல் ஊரைத் திருந்தாதே
ஊனுக்காக உயிர் ஒன்றும் வருத்தாதே
அன்னைபி தாகுரு அன்பை மறக்காதே
அநியாயம் செய்யாதே அவமா யிறக்காதே. (சி)

உ

கல்லாலினீழற்கலந்துதோன்றுங்
கவின்மறையோர்நால்வர்க்குநெறிகளன்று
சொல்லாகச்சொல்லியவாதோன்றுந்தோன்றும
சூழரவுமான்மறியுந்தோன்றுந்தோன்றும்
அல்லாதகாலனைமுன்னடர் தல்தோன்றும்
ஐவகையானினைவார்பாலமர்ந்துதோன்றும்
பொல்லாதபுலாலெலும்பூணுய்த்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனுர்க்கே.

மைக்களமுமான்மழுவும்வரதமுடனபயமுறு
மெய்க்கரமுநாற்புயமும்விளங்குபனிக்கோடும்பூணுஞ்
செக்கருறமதிச்சடையுஞ்சேயிழையோர்பாகமுமாய்
முக்கணிறையாங்காணமுன்னின்றேயருள்புரிந்தான்.

## முருகன் பெருமை

[பண்டிதர் போ. கிருஷ்ணபிள்ளை அவர்கள் கோக்குவில்— மாத்தனைக் கந்தசுவாமி கோவிலில் 14-6-62 வியாழக்கிழமை அன்று நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம்.]

"அஞ்சு முகந்தோன்றில்
ஆறு முகந்தோன்றும்
வெஞ்சமரர் தோன்றில்
வேல்தோன்றும்—நெஞ்சில்
ஒருகால் நினைக்கில்
இருகாலுந் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன்"

என்று நக்கீரர் முருகனின் பெருமையைப் பாடியிருக்கிறார். ஒருமுறை அன்போடு நினைத்தால் இருமுறையும் தோன்றும் வேல் அச்சத்தைப் போக்கும் வலிமைவாய்ந்தது. 'வேலுண்டு வினையில்லை' என்றும், 'வெற்றியைத்தருவது வேல்' என்றும் அடியார்கள் கூறிக்கொள்கிறார்கள்.

ஒரு பெரியாரைக்கொண்டு ஓர் அலுவல் பெறவேண்டுமானால் அவரின் வீட்டுக்குப் போவோர் அங்குள்ள குழந்தைகளுக்கு அன்பளிப்பாகப் பழங்களையோ வேறு சிறு பொருள்களையோ கொண்டு செல்வது வழக்கம். குழந்தைகள் உடனே மகிழ்ந்திருக்கத் தந்தையும் திருப்தியடைந்து, போனவருக்கு உதவி செய்வார். இவ்வாறு இறைவழிபாட்டிலும் தந்தையைப்பிடிப்பதற்குக் குழந்தையை முதற் பிடிப்பது உதவியாயிருக்கும். எனவே முருக வழிபாடு சிறுவனும் முருகனைக்கொண்டு தந்தையாம் சிவனை நினைப்பதற்கு உறுதுணையாகின்றது. சோமாஸ்கந்த முகூர்த்தத்தில் சோமசுந்தரனுகிய சிவனுடன் ஸ்கந்தனுகிய முருகனும் இருப்பதைக் காணலாம்.

மாயா சக்தியாகிய சூரனின் வலிமை முருகனின் வேலுக்குத் தோற்றது. தேவர்கள் வேதம் ஓதாத காரணத்தால் இறைவன் சூரனைப் படைத்தான். ஆனுல் சூரனின் அட்டூழியம் அளவுக்கு மீறியது; தேவர்களை மீன்சுமக்கும்படி செய்தான்; எத்தனையோ தொல்லைகள் வந்ததும் தேவர்கள் தாங்கமுடியாது வருந்தினர். இறையருளால் ஒரு திருக்குழந்தை தோன்றினல் அக்குழந்தையின் வலிமையால் சூரனின் ஆணவம் அடங்கும் என்பதனை உணர்ந்தனர்.

முருகன் பிறந்ததைக் காளிதாசன் இயற்றிய சம்ஸ்கிருத நூலாம் 'குமாரசம்பவம்' அழகாகக் கூறுகிறது. நக்கீரரும் அருணகிரிநாதரும் முருகன் அழகையும் அருளையும் நன்குகப் பாடியிருக்கிறார்கள். முருகனைப்பற்றி எத்தனையோ கதைகள் உண்டு. மாம்பழத்தைப் பெறுவதற்கு முருகன் மயில்மீது வடஇந்தியா முதலிய இடங்களுக்குச் சென்றதும், பிள்ளையார் தாய்தந்தையரைச் சுற்றி வலம்வந்து தாமே பழத்தைப் பெற்றுக்

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

இந்த வழியில் உணர்ச்சிகளை நிறைவுற வெளியிடும் இச்சாதனையில் மகத்தானவெற்றி கண்டுள்ளார். குகனின் வீரமிடுக்கு நிறைந்த கோபக் குமுறலை வெளியிடும் பாடல் ஒன்றைப் பார்ப்போம்:-

"ஆழ நெடுந்திரை ஆறு
கடந்திவர் போவாரோ
வேழ நெடும்படை கண்டு
விலங்கிடும் வில்லாளோ
தோழமை என்றவர் சொல்லிய
சொல்லொரு சொல்லன்றோ
ஏழமை வேடனி றந்திலெ
னென்றெனை ஏசாரோ"

"(நான் இங்கு நிற்கும்போது) இந்த ஆற்றினை இவர்கள் கடந்து போய் விடுவார்களோ?" "நானும் பெரும் யானைப்படையைக் கண்டதும் பயந்துவிடக்கூடிய வில்லாளனே?" என்று குகன் தன் வீரத்தைச் சீற்றத்துடன் கூறும் இந்த வசனங்கள் இன்றும் அன்றும் என்றும் வாழக்கூடிய உணர்ச்சி உருவங்களாகவே மிளிர்கின்றன.

மன்னன் தசரதன் மனைவி கைகேசியை இரந்து வரம்

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சுபகிருது ஆனி மீ
கரு ௳ வெள்ளிக்கிழமை

## இந்தப் போக்குச் சரியா...?

—o—

விசைவண்டிப் போக்குவரத்து தேசியமயமாக்கப் படத் திட்ட மிடப்பெற்ற பொழுது அது நிறைவேற முடியாத தொன்றெனப் பொதுவாகப் பலர் கருதியிருந்தனர். ஒருசிலர் இப்போக்குவரத்துச் சேவையைத் தங்களுக்குள் வைத்திருந்தபடியால் அவர்கள் மித மிஞ்சிய இலாபம் பெற்றனரென்றும், அது சமூக முன்னேற்றத்துக்காகாதென்றும் அரசியல் நுணுக்கத்தத்துவ ஆராய்ச்சியாளர் எண்ணினர். அவ்வாறு போதித்தனர். அந்த முடிபை மக்களும் வரவேற்றனர். தேசிய மயமான இ. போ. சபையோ எண்ணியபடி இயங்காத மக்களுக்கு மன வேதனைக்குரிய சாதனமாய் மாறுபாடாய்ச் செயல்படத் தொடங்கி இப்பொழுது இயங்கவும் போக்குவரவு செய்யவும் இயலாததாய் நாட்டுக்குப் பாரமாய் வந்துவிட்டது.

குறிப்பாகக்கூறுமிடத்து வடபகுதிப் போக்குவரத்துச் சேவை பெருங்கவலைக்கிடமான நிலைமையில் இருக்கின்றதென்றால் அவ்வளவும் உண்மையான உரையேயாகும். நாளுக்குநாள் போக்குவரத்துச் செய்யும் பயணக்காரர் தொகை அதிகரித்து வருமிக்காலத்தில் நாழிகைக்கு நாழிகைவிசைவண்டிகள் பழுதுற்றுப் பாதையோரத்திற் பார்வைப் பொருளாக ஒதுக்கப்பட்டிருக்கும் காட்சி இக்கூற்றை உறுதிப்படுத்தும். போக்குவரத்து ஒழுங்கினை பொதுசனத்துக்கு வசதியாக அமைக்கவேண்டியது ஆட்சியாளரின் கடமையாகும். ஆனால் இன்று வீதிகள் தோறும் வீணாக நேரங் கழித்து வேலைக்குரிய காலத்தை அவமே செலுத்துகின்ற மக்களின் பரிதாப நிலையைப் பார்த்துப் பரிகாரம் தேடுவார் ஒருவருமில்லை. பள்ளிக்கூட மாணாக்கர்கள், வியாபாரஞ் செய்கின்றவர்கள் உத்தியோகத்துக்குச் செல்கின்றவர்கள் இன்னும் மேலாக வைத்திய நிலையங்களில் மருந்து பெற வேண்டியவர்கள் விசைவண்டி வருமா என்று வழிக்கு மேல் விழி வைத்துக் கூர்ந்து பார்த்த வண்ணமாக அலமக்து நிற்கும் நிலைமையை மாற்ற ஆட்சியாளர்களோ, பாராளுமன்றத்தங்கத்தவர்களோ வேறும் பரோபகாரிகளோ முன்வருவாரில்லை. முன்வந்தவர்கள் முயற்சியும் பயனடைவதில்லை முற்றிலும் விபரீதமாகவே யிருக்கின்றது விசை ஆற்றலினால் விண்ணும் மண்ணும் விநாடிப் பொழுதில் வலம்வரத்தக்க இயந்திர அமைப்புள்ள இந்நாட்களிலா மாதம் போம் காதவழி என்ற நிலை தானும் இல்லாமல் இயங்கிப்போகச் சம்மதமில்லாத போக்குவரத்துச் சேவை அதுவும் ஆட்சியாளர் பொறுப்பில் இருக்கவேண்டும்?

—

# தமிழர்பண்பாட்டின் சாரம்சிவஞானபோதம்

(முற்றொடர் 3)

சைவ சித்தாந்த ஆராய்ச்சி இன்று இலங்கையில் குன்றிவருவது தமிழ் மக்களின் பொது வாழ்வுக்கே கெடுதியை உண்டாக்குமென நினைக்கிறேன். ஈழநாட்டிலிருந்து அவ்வப்போது தமிழுக்கும் தமிழர் பண்பாட்டுக்கும் சிந்தனை வளத்துக்கும் ஆக்கந்தரும் பணிகள் செய்யப்பட்டே வந்தன. அதை நாம் மேலும் தொடர்ந்துவிடாது நடத்துவோமானால் இலங்கையிலுள்ள தமிழ்ச்சமூகம் வீறுடைய வாழ்வை மீட்டும் பெற வழியுண்டு. இந்த எண்ணத்தினலேதான் சிவஞான போதக் கருத்து என்ற இக்கட்டுரையை எழுத முன்வந்தேன். தமிழிலேயுள்ள சிவஞானபோதம் வடமொழியிலுள்ள பன்னிரண்டு சிவஞான போதச் சூத்திரங்களின் மொழிபெயர்ப்பு என்பது ஆன்றோர் முடிபு. இவ்வட மொழிச் சிவஞானபோதம் "இரௌரவம்" என்ற ஆகமத்தின் முடிவிலுள்ள தெனவுங்கூறுவர். இவ்வட

**நவாலியூர்,**
**திரு. சோ. நடராசன்**

மொழிச் சிவஞானபோதச் சூத்திரங்களையே 13-ம் நூற்றுண்டின் முற்பகுதியில் வாழ்ந்த மெய்கண்டதேவ நாயனர் தமிழில் அதர்ப்படயாத்துத் தமிழ்ச் சிவஞான போதமென்ற நூலைச் செய்தாரெனவும் ஆன்றோர் கூறுவர்.

இவ்விரு சிவஞானபோதமும் ஒரு கருத்தையே அறிவுறுத்துகின்றன என்பது சொல்லாமலே போதரும். சிவஞானபோதக் கருத்தைச் சுருக்கமாக இங்கே கருதுவாம்.

அறிவுள்ள பொருளும் அறிவற்ற பொருளுமாகக் காட்சிதரும் இந்த உலகம் தோன்றி நின்று ஒடுங்குந் தன்மையுடையது அத்தகைய முத்தொழில் உடைமையால் இவ்வுலகம் உள்பொருளேயாகும், இல்லாத ஒரு பொருளுக்குத் தோற்றமில்லை. முயற்கொம்பு என்ற ஒன்று இல்லாதபடியால் அதற்குத் தோற்றம் எவரும் கூறமாட்டார். உலகம் உள்ள பொருளானபடியால் அதை உண்டாக்கியவன் ஒருவன் இருக்க வேண்டும். அவனே இவ்வுலகுக்கு நிமித்தகாரணன். ஒரு குடத்தை வனைவதற்கு மண் வேண்டும். சக்கரம் வேண்டும். குயவன் வேண்டும். இங்கே மண் முதற்காரணம். சக்கரம் துணைக்காரணம். குயவன் நிமித்த காரணன் உலகுக்கு முதற் காரணம் மாயை. இந்த மாயை அறிவில்லாத பொருள், அந்த மண்ணைப் போல. அது நிமித்தகாரணமாகமாட்டாது. அது அளந்தறியக்கூடியதும் சுட்டியறியக்கூடியதுமான சடப்பொருள், சேதனமில்லாதது. எனவே, இந்த நிமித்த காரணனே சங்காரத்தைச் செய்பவனுயுமிருக்க வேண்டும். அவனே முழுமுதற் கடவுள். அழித்தலே முத்தொழிலில் முதன்மையுடையது. ஏனெனில், மறைத்த பொருளிலிருந்தே தோற்றமுண்டாகும். எதில் ஒரு பொருள் ஒடுங்குமோ அதிலிருந்தே அதற்குத்தோற்றமுண்டு. மேலும் சங்காரத்தைச் செய்யும் இறைவனே நிமித்தகாரணனுயிருக்கமுடியும். காரணங்களெல்லாம் சங்காரத்தில் அடங்குகிறபடியால் வேறு கடவுளரெல்லாம் சங்காரக் கடவுளில் அடங்குபவரே.

ஒருவன், ஒருத்தி, ஒன்று என்று சொல்லப்படும் உலகத்துச் சேதன அசேதனப் பொருள்களெல்லாவற்றையும் இறைவன் காலத்துக்குக்காலம் உண்டாக்குவதன் நோக்கம் செம்பிலே களிம்புபோல ஆன்மாவை அநாதியாய்ப் பற்றிக் கொண்டிருக்கும் சகசமலமான (உடன் தோன்றிய) ஆணவ மலத்தை நீக்கி உயிர்களுக்கு விடுதலையென்னும் முத்திநிலையைக் கொடுப்பதே. இது சிரேயஸ் என்ற செம்பொருள். இந்த விடுதலை எவ்வாறு உண்டாகும். உயிர்கள் தாம் செய்த நல்வினை தீவினைகளுக்கு ஏற்றபடி உலகத்தையும உடம்பையும் கரணங்களையும் போகங்களையும் பெற்று அவ்வவ் வினைக்கேற்ற பயன்களை அனுபவிக்கும் போது குருவருளால் ஞானம் பிறக்கும். இந்த ஞானம் உயிர் சிவனோடு ஐக்கியம் உள்ளதென்பதையும் தன் செயலெல்லாம் சிவன் செயலென்பதையும் உணரச்செய்யும்.

கடவுள் உயிரோடு இரண்டறக் கலந்து நிற்கிறார். அந்த நிலை பேதமுமன்று, அபேதமுமன்று, பேதாபேதமுமன்று. அதை ஒன்ருகி வேருய் உடனுய் நிற்கும் நிலை. பொருட்டன்மையால் ஈசன் உயிர்கட்கு வேருனும் வியாபகத்தினலே வேற்றுமையின்றி அவ்வுயிர்களே யாகித் தன்னைவிட்டு நீங்காத தன்னருட்சத்தியின துணையால் படைத்தல், காத்தல், மறைத்தல், அழித்தல், அருளல் என்ற பஞ்சகிருத்தியங்களைச் செய்கிறான். அது, ஆன்மாக்களை அவை செய்த இரு வினைகளுக்கிடாக அவற்றின் பயனைத் துய்ப்பிக்கவே. இறைவனோடு என்றும் நீங்காதிருந்து தொழில் செய்யும் சத்தியைத் திரோதான சத்தியென்றும் சமவேத சத்தியென்றும், அருட் சத்தியென்றும் கூறுவர் இச்சத்தியே உயிர்களுக்கு உடம்பையும் பொறிகளையும் உலகத்தையும் அதில் அனுபவிக்கும் போகங்களையும் உயிர்கள் செய்த வினைகளுக்கேற்றவாறு வழங்கி, வினைப்பயனைத் துய்ப்பிக்கும், இல்லாவிட்டால் செயலற்றுக் கேவல நிலையிலுள்ள உயிர் வினைப்பயன்களைப் புசிக்கமாட்டாது, இவ்வாறு போகங்களைத் துய்த்து இருவினையொப்பும் மலபரிபாகமும் அடைந்த உயிர் சிவனருளால் மெய்ஞ்ஞானமாகிய சிவனடி ஞானத்தைப் பெறும். இருவினைக்கீடாய உயிர் அவ்வினையின் பயனை அனுபவிக்க உதவி செய்யும் வகையில் தனுகரண புவனபோகங்களைக்கொடுப்பது இந்த அருட்சத்தியான திரோதானசத்தியே. ஆனல், அவ்வினையின் அனுபவம் எவ்வாறு அமையுமென்பதை நிச்சயிப்பது இருவினைகளே. அஃதாவது ஒருவனுக்கு எத்தகைய உடலும சத்திகளும் போகப் பொருளும் கிடைக்கும் என்பதை நிச்சயிப்பது இருவினைகளே. இந்தக் கன்மம் சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என மூன்று வகைப்படும். சஞ்சிதம் என்பது பிறவிதோறும் ஈட்டிய வினையின் தொகுதி. பிராரத்தம என்பது அந்தச் சஞ்சித வினையிலிருந்து இப்பிறவியில் அனுபவிக்கத் தொடங்கிய வினைப் பயன். ஆகாமியமாவது பிராரத்த வினையை நுகரும் போது வந்து சேரும விருப்பு, வெறுப்பு, அது புதிய வினைக்கு வித்தாகும. இதுவே நிகழ்காலத்தில் செயயும் வினை.

பதியாவது கடவுள். பாசம் என்பது ஆணவம, கன்மம,

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

# அணிந்துரை அரங்கம்

## "நயினை நாகேசுவரி"

எமது தாய்நாடாகும் தென்னிந்தியாவின் தென்கோடியில் உலகமெலாமீன்றுஞ் சரியா முலைச்சியாய் ஓர்கன்னி தவஞ் செய்கின்ருள்.

சேய்நாடாகிய ஈழ மண்டலத்தின் வடகோடியில் ஓர் அன்னை யோகாசனத் தமர்ந்திருந்து மக்களைப் பரிபாலிக்கின்ருள். இது மக்களாகிய நாம் செய்த தவமேயன்றே!

ஈழநாட்டுத் தாயார் அமர்ந்திருக்கும்திருத்தளி நயினதீவு என்னுந் தீவகமாகும. இத்திருத்தளியிற் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் அம்பாளின் அருளொழுகு வடிவத். திருமேனியையும், அம்பாள் அடியார்க்களித்த வருட்டிறன்களின் உருவங்களையும், அம்மையார் உலாப் போங் காலங்களில் ஆரோகணித்து வரும் பூந்தேரின் திருவுருவத்தையும் பிறசரித வரலாற்று வடிவங்களையும் மிக அழகாகக் காட்டி, இத்தலத்தின் சிறப்புக்களையும் முன் சரித வரலாறுகளையும் இனிய செந்தமிழ் நடையில் எழுதி வெளியிடப்பட்ட "நயினை நாகேசுவரி" என்னும் எழில்மிக்க சிறுநூலை, அதன் ஆசிரியராகிய செந்தமிழ்ச் செல்வன் திரு. குல. சபாநாதன் அன்பளிப்பாக அடியேனுக்கு அனுப்பியிருந்தார்கள்.

இந் நூல் ஓர் வரலாற்று நூலாக விளங்குவதுடன் இதனைப் படிக்கும் தவமுடையாரைத் தேவியின் அருள் வெள்ளத்தில் மூழ்குவிக்கும் தெய்வத் தன்மை வாய்ந்த பக்தி நூலாகவும் மிளிர்கின்றது.

திரு. சபாநாதன் வெளியிடும் நூல்கள் எல்லாம் கண்கவர் வனப்பின. ஆனல் "நயினை நாகேஸ்வரி" முந்திய நூல்களினும் சிறந்து விளங்குவதை அன்பர்கள் போற்றுவார்கள். இதன் விசேடம் அட்டைப் படத்தில் விளங்கும் வானளாவிய தூல லிங்கத்தின் காட்சியோ அல்லது உள்ளே விளங்கும் "மணங்கமழ்தெய்வதிளநலங்காட்டி' வாடாமாலை திருவடி தோய அணிந்து ஓங்காரத் திருவாசியினுள்ளிருக்கும் அம்மையின் திருவுருவோ, அன்றியிரண்டு வடிவங்களின் மாட்சியோ யானறியேன்.

கற்றோர் எல்லோரும் பக்தி நூல் எழுதுபவர்களல்லர். திருவருளாகிய ஞானசூரியன் உதிக்க, பக்குவநிலையடைந்த உள்ளத் தாமரை விரிய, அத்தாமரை மலரிலிருந்து சுரக்கும் தேனமிர்தமே இப் பக்குவர் பாடல்களாகவும் சொற்பொழிவுகளாகவும் சொரிவது

திரு குல. சபாநாதன் தமது சிறு பருவந்தொட்டே அம்மையின் திருவருள் கைவரப்பெற்ற பக்தன். அதுவும் அவர் அன்னையின் தவவொழுக்கத்தாலாயது. ஆதலின் நாகேஸ்வரியின் திருச்சரிதையை எழுதவும், அதனைத் தமது அன்னையின் திருவடிகளுக்கே அர்ப்பணஞ் செய்யவும திருவருள் செய்தவளும் அந்த நாகேஸ்வரியேயாகும்.

இதனை நாமும் எமக்கோர் முன்மாதிரியாகக் கொண்டு ஒழுகல் சாலச்சிறந்ததாகும்.

இவ்விதமான பத்திநூல்களைப் பயின்று நாம் திருவருளைப் பெற்று நற்கதிப்பேறு பெறுவோமாக.

அம்மையின் திருவடிவத்தைக் கண்டதும் அடியேன் உள்ளத்திலே ஆசைஒன்றெழுந்தது. அது பின் வரும் செய்யுளாக நிறைந்தது.

மஞ்சேய் கருங்கொந் தளமேலே
வாடாத் தீப வணிகால
வதனச் செந்தா மரையிலிரு
வணணக் குவளை பூத்தொளிர
நெஞ்சிற்சுடர்கா லணிமணிப்பூண்
நிறைந்தே கதிரி னொளிவீச
நீண்டதொடையொன் றடிவருடி
நின்பே ரழகுக் கழகுசெய
அஞ்சக் கரத்தின் சமட்டியென
அருளின் விளங்கு திருவாசி
அமைந்த யோகாசனத்திருந்தே
யடியார்க் கென்றும் பெருவாழ்வும்
சிந்தித் திடுபே றத்தனையும் [வும்
சிறக்க வருள நயினையினிற்
தேவாய் வாழுந் தாயேயுன்
திருத்தாள் காட்டி யாள்வாயே,

க. வேலுப்பிள்ளை,
உடுவில்.

கலிலைக் கீர்த்தனம் — 4.

# எப்படிக் காதல்கொண்டாய்

★

— யாழ்ப்பாணம் ந. வீரமணி —

இராகம் : வசந்த  தாளம் : ஆதி.

பல்லவி

எப்படிக் காதல் கோண்டாய் — சகியே
செப்படி வித்தைகள் செய்யும் முருகன்மீதில்

அநுபல்லவி

அப்பனுக்கே புத்தி செப்பிய தப்பிலிமுன்
தப்பவழியறியாத தருவாக நின்றவன்மேல் (எப்)

சரணம்

மாங்கனியை வாங்கவந்து ஆண்டியாக நின்றுன்அவன்
மங்கையர் இருவருட்ன் மருவிக் குலவிடுவான்
ஓங்குகதிர் வேலெடுத்து ஒறுக்கும் அசுரர்குலம்
ஒழித்தவன் தேவருக்கு ஒளிரருள் அளித்தவன்
தூங்குகரி மாமுகனின் துணையவன் இளையவன்
தோகைமயில் மீதமரும் வாகைக்கடம் பணிமார்பன்
பூங்கமழும் சோலைமலி புனிதநல்லை நகரில்
புண்ணியன் போலிருக்கும் புதுமனக் கள்வன்மீதில். (எப்)

# தமிழர் பண்பாட்டின் சாரம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மாயை என்னும் மூன்று. பதி, பாசம் என்ற இவ்விரண்டையும்விட மூன்றுவதாயுள்ள பொருள் உயிர்; அஃதாவது பசு.

உயிர் சுட்டியறியப்படும் பொருளன்று. உடம்பிலே உள்ள அவயவங்களில் ஒவ்வொன்றையும் இஃது அன்று, இஃது அன்று என்று சொல்லிச் சொல்லிக் கடைசியாய் எஞ்சி நின்றுகொள்வது எதுவோ அதுவேயாய் இருப்பது உயிர்: உடல் உயிரன்று, எது உடலைத் தனக்குக் கவசமாய்க் கொண்டுள்ளதோ அதுவே உயிர். ஐம்புலன்கள் உயிரல்ல. கண் கட்புலனுவதையே காணும், காது கேட்குமே யன்றிப் பார்க்கமாட்டாது. அவ்வாறே ஒவ்வொரு புலனும் தத்தமக்கியைந்த உணர்ச்சியைப் பெற ஐந்து புலன் வழியாகவும் வரும் உணர்வை ஒருசேர ஒரே நேரத்தில் பெறுவது எதுவோ அதுதான் உயிர். நித்திரையில் கனவுகாணும் சூக்கும சரீரம் உயிரன்று. சூக்குமத்திலே கண்ட கனவை நனவிலே தாலத்தில் அறிந்து கூறுவதே உயிர். சுழுத்தியிலே அஃதாவது உறக்க நிலையிலும் துரியத்திலே அஃதாவது புறக்கரணங்களாகிய புலன்களும் உட்கரணங்களாகிய மனம் முதலியனவும் தொழிலற்றிருக்கும் பேருறக்க நிலையிலும் உயிர்ப்பாயிருக்கும் பிராணவாயு உயிரன்று. அறிந்தாங்கு அறிதலின்றி ஐந்து அவத்தைப் பட்டு அறிதலால் பிரமம் உயிரன்று. அனைத்துங் கூடிய சமுதாயம் உயிரன்று. ஏனெனில், அனைத்து நீங்கிய துரியாதீதத்தும் உயிருண்டு தீபத்தின் ஒளிக்கும் கண்ணொளிக்கும உள்ள பேதம் போன்றது. உடல் கரணம் என்பன எல்லாஞ் சேர்ந்த சமுதாயத்துக்கும் உயிருககும் உள்ள பேதம். மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்ற அந்தக் கரணங்கள் உயிரல்ல. ஆனல், இந்த உயிர் உட்கரணங்களோடு சேர்ந்து நிற்கும். சித்தத்தினல் பொருள்களைப் பருமட்டாக உயிர் அறியும். மனம் புலன்களின் செய்தியை அறிவிக்கும். அகங்காரம் இந்தச் செய்திகளை ஆராயும். புத்தி ஆராய்ந்த முடிவைக் காணும. இவற்றின் துணை உயிருக்கு அவசியம். ஆணவ மலத்திலே அழுந்திக் கிடக்கும் உயிர்க்கு இவை கண்ணுடி போன்றவை. உயிர் இந்த அந்தக்கரணங்களோடும், ஏனை மாயா தத்துவங்களோடுஞ் சேர்ந்து சாக்கிரம் சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம், என்ற ஐந்து நிலைகளையும் அடையும இவை முறையே நனவுநிலை கனவுநிலை, உறக்க நிலை பேருறக்க நிலை உயிர்ப்படங்கல் நிலை என்பனவாம்,

—தொடரும்.

## குரும்பசிட்டி சன்மார்க்க சபையில் திரைப்படம்

25-6-62 திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு குரும்பசிட்டி சன்மார்க்கசபை மண்டபத்தில் அரசாங்க தகவற் பகுதியினர் திரைப்படம் காட்டினர்.

இலங்கையின் பொருளாதாரத்தை விருத்தியாக்கும் கைப்பணிக் காட்சிகளான தும்படித்தல்,கயிறு திரித்தல், பாயிழைத்தல், பன்ன வேலை, நெசவு வேலை என்பன பல வர்ணப் படங்களாகக் காண்பிக்கப்பட்டன.

பக்திப் பரவசமூட்டும் காட்சிகளாகச் சைவக்கோவில்களாய திருக்கேதீசுவரம், நல்லூர், நயினுதீவு கொழும்பு பொன்னம்பலவாணேசுவரர் ஆலயம், செல்வ விநாயகராலயம் என்பனவற்றுடன் திருமுறைவிழா, நடனவிழா எழுத்தாளர்விழாக் காட்சிகளும் இடம்பெற்றன.

மகாதேசாதிபதியவர்கள் பதவியேற்பு வைபவமும், பௌத்த, சைவ விஷ்ணு ஆலய வழிபாடுகளும் காட்டப்பட்டன.

மாணவர்களின் விளையாட்டுப் போட்டி, மரதன்சைக்கிள் ஓட்டம் போன்றபலநிகழ்ச்சிகள்கொண்ட இக் காட்சிகளை ஆசிரியர் மாணவருட்பட ஏராளமானேர் கண்டு களித்தனர். க-கி.

## இளம்பிள்ளை வாதம் தடுப்புமருந்து விநியோகம்

தற்போது பயங்கரமாகப் பரவிவரும் இளம்பிள்ளைவாத நோய்க்காகக் குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்திலும், மகாதேவ வித்தியாசாலையிலும் 21-6-62 ஞாயிற்றுக்கிழமைதெல்லிப்பழை சுகாதாரப் பகுதியினரால் நூற்றுக்கணக்கான பிள்ளைகட்கு மருந்துகள் கொடுக்கப்பட்டன.


யாழ்ப்பாணம்

## — ஐக்கிய இலாப நிதி —

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.


இவ்வாரம் (1-7-62 — 7-7-62)

## உங்கள் பலன் ?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

உமது உடல்நிலை இவ்வாரத்திலிருந்து திருந்தவேண்டும். ஆனல் கண்நோய் தொடர்ந்து இருந்து வரும். பண இலாபங்களும் புதிய நண்பர்களின் சலுகைகளும் உண்டாம்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

தங்கைகள் தொடர்ந்து உதவியாக இருப்பர். புதிய முயற்சிகள் வெற்றியாகும். ஆனல் வேலை கூடுதலாயிருக்கும். உடல்நிலைக் கோளாறும் உண்டாம்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 2 4,3, திருவாதிரை, புனர்பூசம் 1, 3 4ம் பாதம்.

மனநிம்மதி இருக்காது புதிய முயற்சிகள் நல்ல பலனைத் தரும். ஆனல் சில கண்டனங்களுக்கு முகங்கொடுக்கவேண்டி வரும். பண இலாபம் நிச்சயம்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

நிதி, தொழில் நிலைகளில் சில முன்னேற்றம் ஏற்படும். ஆனல் குடும்ப நிலை மேலும் குழப்பத்திலேயே இருக்கும். செலவு பெருகும் உடல்நிலையைக் கவனிக்கவும்,

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

தடைகளைத் தாண்டவும் உமது எண்ணப்படியே அலுவல்கள் நடாத்தவும் உமமால் முடியும். பொறுப்புகளில் வெற்றிநிச்சயம் நிலபுலங்களால் இலாபமும் உண்டாம்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

உமது எண்ணப்படி உமது அலுவல்களில்நடந்துகொள்வதுகடினமாக இருக்கும். உறவினர் சிறிது தொல்லையும் செலவும் உண்டு பண்ணுவர். ஆனல்உமதுதொழில் சம்பந்தமான பிரச்சினைகள் சில தீர்வுபெறும், உடல்நிலையும்திருந்த வேண்டும்.

**துலாம்**, சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

அலுவலகத்தில் சச்சரவுகள் உண்டாம். பெருங் கண்டனங்களுக்கு நீர் முகங்கொடுக்க வேண்டி வரும். புதிய பொறுப்பொன்றையும் தோள்மேல் போட்டுக்கொள்ள வேண்டாம். தந்தை வழி உறவினர் சண்டைக்கு நிற்பர். ஆனல் பணமளவில் நல்லவாரம்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

குடும்ப நிலைகள் குழப்பமாக இருக்கும், உடல்நிலையும் திருப்திகரமாக இருக்காது. ஆனல் பணமளவில் நல்லவாரம். ஞாயிறு திங்களும் செவ்வாய் காலையும் எச்சரிக்கையோடு கழிக்கப்பட வேண்டும்.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

எதிர்ப்புக்களை உம்மால்தாண்டிவிட முடியும். ஆனல் செவ்வாய் புதனும் வியாழன் காலையும் எச்சரிக்கையோடு கழிக்கப்படவேண்டும். வாரமிகுதிப்பகுதி தொழில் விவகாரங்களுக்கு ஓரளவு நல்ல வாரம்.

**மகரராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

சிறு உடல்நிலைக் கோளாறுகளுக்கு இடமுண்டு. வயிற்றுக் குழப்பங்களும் உண்டாம். பணமளவில் முதலரைவாரமும் சாதகமானது. வியாழன் மாலையையும் வெள்ளி சனியையும் எச்சரிக்கையோடு கழிக்கவும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.

தாயாரின் உடல்நிலை பாதிக்கப்பட இடமுண்டு. வாகனமூலமான செலவுகளுக்கும் இடமுண்டு உமது உடல்நிலையும் திருப்திகரமாக இருக்காது. தொழிலளவில் ஓரளவு நல்லவாரம்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

நிலபுலங்களால் இலாபம் நிச்சயம். சகோதர சகோதரியர் தொடர்ந்து உதவியாக இருந்து வருவர். ஆனல் மன அமைதி இருக்காது. சிறுஉடல்நிலைக் கோளாறுகளும் உண்டாம்.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

தெல்லிப்பழை கிழக்கு
முருகேசர் இராமுப்பிள்ளை
வழக்காளி.

எதிராக

இல. M. B. 2858

ஏழாலை
1. கதிர்காமு சிவகுரு
2. பெண் சரஸ்வதி
3. இளையதம்பி அலங்காரசிங்கம்
—எதிராளி.

யாழ்ப்பாணம்டிஸ்திறிக்கோட்டில் M. B. 2858ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள் 1962ம் ஆண்டு ஜூலை (ஆடி) மாதம் 28ம் திகதி (28-7-62) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 14333/-ம், இதில் ரூபா 10000க்கு 8-6-59 திகதி தொடக்கம் 5-9-59 திகதி வரைக்கும் 100க்கு 10 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 335-10 சதமும் மேலும் கோட்டுச் செலவு ரூபா 27-ம் இதில் ரூபா 200ம் மேலும் ரூபா 4800ம், மேலும் ரூபா 3700ம் இறுபட்டது.

காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகக் கோயிற்பற்று ஏளாலையிறை "இலுக்கலக்கலட்டி" நிலப்பரப்பு 15ம் குளி $7\frac{1}{2}$ம் இதில் சிந்தமாக நிலப்பரப்பு ஒன்றரை ($1\frac{1}{2}$ம்) கடைக் கட்டிடங்களும் செய்பயிர் வான்பயிர்களும் மிகுதிக் காணியில் இருக்கும் கிணற்றில் பங்கும் மிகுதிக் காணியின் தெற்கெல்லையருகாக 4 அடி அகலமுள்ள பாதையும் எல்லை கிழக்கு றோட்டு, வடக்கும் மேற்கும் மிகுதிஆதனம். தெற்கு நல்லதம்பி கன்னித்தம்பியின் ஆதனம். இதடங்கலும்.

2. மேற்படி ஏழாலையிறை "மாதிரையும் இலுக்கலக்கலட்டியும்" நிலப்பரப்பு 9ம் செய்பயிர் வான் பயிர்களும் வீடும், கிணறும் மேற்கெல்லையில் இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலும் எல்லைகிழக்கு ஒழுங்கை. வடக்கு ஒழுங்கையும் பொன்னையா பெண் நாகம்மாவின் ஆதனமும், மேற்கு நல்லையா பெண் நாகம்மாவின் ஆதனம். தெற்கு றோட்டு. இதடங்கலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer &
Licensed Auctioneer.
தெல்லிப்பழை, 5-5-1962,
M. 34, 22-6.62.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல, M, B. 3676,
நாகலிங்கம் அருளம்பலம்
பண்டத்தெருப்பு,
—வழக்காளி

எதிராக

1. குசைப்பிள்ளை ஞானமுத்து
2. ஞானமுத்து பெண் அக்னேசம்மா - சிறுவிளான்.
—எதிரிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M.B. 3676-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் காணி 1962-ம் ஆண்டு ஆவணிமாதம் 11-ம் உ (11-8-62) சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-ரூபா 3500/-உம் 4-10-60 தொடக்கம் 2-3-61 வரையிலும் ரூபா 3000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின்னல் பணம் முற்றாக அறவிடும் வரையில் முழுத்தீர்வைத் தொகைக்கு 5 வீதவட்டியும் கோட்டுச்செலவு ரூபா 264-70-ம்.

காணியின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம்மேற்கு பண்டத்தெருப்புக் கோயில்பற்று சிறுவிளான் இறை "திலகலை" நிலப்பரப்பு 2 1/4-ம், வீடும், செய்பயிர் வான் பயிர்களும். கிழக்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் அரைப்பங்கும் இந்த 2 1/4 பரப்பிற்குக் கிழக்கெல்லை காமேல் பிள்ளை பெண் அருளம்மாவினதும் சவரிமுத்து பெண் இராசம்மாவினதும் ஆதனங்கள். வடக்கு ஒழுங்கை, மேற்கு மரியார் செல்லத்துரையின் ஆதனம், தெற்கு வயித்தி அன்னியாசுவிற்கும் கமேல்பிள்ளை பெண் அருளம்மாவிற்குமுரிய ஆதனம். இதில் சொரியலாக ஐந்தில் மூன்று பங்கு அதைச் சேர்ந்தவைகளும். கிறுத்தினின் காணியில் தென்கிழக்குப் பக்கமாகவிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புருத்தும் உருத்தும்,
முற்பதிவு:— E 337/138.

க. செல்வத்துரை,
கொமிஷனரும்,
விலைமதிப்பாளரும்,
"முருகன் இல்லம்"
இணுவில், 20-6-62.
M. 45 22-6-62,

# நல்லைநகர் விநாயகர் பதிகம்

—————:0:—————

[நவாலியூர் ஸ்ரீ க. சோமசுந்தரப்புலவர் அவர்கள் பாடியது]

கார்கொண்ட நெஞ்சகக் காட்டிலே யாணவக்
கருவினுரு வாகி வளருங்
காமாதி பலமரங் கைக்கொண்டு சாடியே
கருணைமத மொழுகுவெள்ள
நீர்கொண்டு பாய்ச்சியிரு தாள்கொண் டுழக்கியது
நெக்குநெக் குத்தூரவே
நின்கோடு கொண்டுழுது விதிவரம் போடியே
நிறைஞான வெருவையிட்டு
ஏர்கொண்ட முத்தியெனும் வித்தையு மளிப்பையே
லெளியனே னதைவிதைத்து
என்னுடைய வுற்பவப் பசிதொலைய வுலவாத
வின்பவிளை வுண்டுமகிழ்வேன்
சீர்கொண்ட கரிமுகத் திருமேனி கொண்டவென்
தெய்வமே நல்லைநகர்வாழ்
சிக்கற நினைப்பவர்கள் விகலின மனைத்துமழி
சிற்பர முதற் கடவுளே. 7.

பூவருந் திருமங்கை பொலியுமணி மார்பனும் புண்டரீக மலர்மேவிய
பொற்கொடி பொருந்துமறை நாவனுஞ் சிமயமலி
பூரணி யிடப் பாகனும்
மூவருந் தங்கரும மூற்றுதற் குன்னையே முன்னிடுவ ரென்பதங்நான்
முப்புரமெரித்தகதையாலறிந்தேமுன்னை மன்னிட்டுவழிபடாதிங்
கேவரெத் தொழில்புரியி னும்முற்று ருமையில்எவ்வுலக வாசிகட்கு
மெத்தேவர் கட்குநீ மெய்த்தேவ னுகுவாய் என்வினை
கெடுகக மூன்வா
தேவரும் முனிவரும் சித்தரும் விழையருட் டிருமேவு
நல்லைநகர்வாழ்
சிக்கற நினைப்பவர்கள் விக்கின மனைத்துமழி சிற்பரமுதற் கடவுளே.

—தொடரும்.

## இசைக் கலைஞருக்குப் பட்டமளிப்பு

கொடிகாமம் தேன்தமிழ்மன்றத்தின் ஆதரவில் கொடிகாமம் சந்தை மைதானத்தில் அமைக்கப்பட்ட வாசுகி அரங்கில் வள்ளுவர் விழா, முன்னாள் உதவி வித்தியாதிபதி திரு கே.எஸ். அருணந்தி தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. திரு வி. என், நவரத்தினம் "வையகம் வாழ்க" என்று பொறிக்கப்பட்ட கொடியை ஆரோகணஞ் செய்துவைத்தார். திரு. எஸ் கே. செல்லையா வரவேற்புரை கூறினர். கிராமச்சங்கத்தலைவர் திரு. ஏ. ம. சிதம்பரப்பிள்ளை திருவள்ளுவர் படம் திரைநீக்கஞ் செய்தார்.

பண்டிதர் வித்துவான் திரு. க இ. நடராஜன், வித்துவான் திரு. க. ந. வேலன் முதலான அறிஞர்கள் வள்ளுவர்பற்றியும். இசைப் பகுதிக்குத் தலைமைவகித்த அகில இலங்கைச் சங்கீத வித்வ சபைச் செயலாளரும் இயக்குநருமாகிய சங்கீத வித்துவான் திரு. எஸ், பரம் தில்லைராஜா வள்ளுவரும் இசையும்பற்றியும் உரையாற்றினர்.

இசைப்புலவர் திரு சி. செல்லத்துரையின் இசைத்திறமையையும் கவித்துவத்தையும், இசைத்தொண்டு, தமிழ்த்தொண்டு, சமயத்தொண்டு என்பவற்றையும் பாராட்டி தேன் தமிழ்மன்றம் சார்பாக "இசைக்குரிசில்" எனும் கௌரவப்பட்டம் ரஸிகர்கள் முன்னிலையில் திரு- தில்லைராஜாவால் வழங்கப்பட்டது.

இசைக்குரிசில் செல்லத்துரையின் இசை விருந்தும், கணேசன் கோஷ்டியாரின் மேளக்கச்சேரியும் திரு. ப. தியாகராஜனின் நூதன இசை விருந்தும் நடைபெற்றன.

———

## மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை

நாள்: சுபகிருது ஞூ ஆனி மீ உஉ உ (6 - 7 - 62) வெள்ளிக்கிழமை.

இடம்: யாழ்ப்பாணம், சைவ பரிபாலன சபை நாவலர் மண்டபம்

நிகழ்ச்சிகள்:

மு ப. 9½ — பி. ப. 1.

சிவபூஜாமண்டபத்தில் சிவபூசை, நாவலர் மண்டபத்தில் புராணபடனம், திருவாதவூரடிகள் புராணம்- திருவடிபெற்ற சருக்கம், கடவுளாராதவண, மாகேசுர பூசை,

இரவு: 7 மணி

விரிவுரைக்கூட்டம்

தலைவர் பண்டிதர் பிரம்மஸ்ரீ. வ. மு. இரத்தினேசுவரஐயர் அவர்கள்.

1. தலைவர் முன்னுரை
2. 'மாணிக்கவாசகசுவாமிகள்' பண்டிதர், வித்துவான் திரு. இ, திருநாவுக்கரசு அவர்கள்.

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்
சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம். 27-6-62.




யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில். யாழ்ப்பாணம் பிறவுன்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 29-6-1962 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்

## இசை விருந்து

—0—

தபால் அதிகாரியாகக் கடமையாற்றுகின்றவரும், நாடகங்கள் பல நடித்துப் புகழ் பெற்றவருமாகிய திரு க. பொன்னம்பலம் அவர்களின் புத்திரியாரும், நியாயதுரந்தரர் திரு. பாலகிருஷ்ணர் பாரியாருமாகிய திருமதி. இலட்சுமிதேவி அவர்களால் கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய கோவில் திருப்பணி நிதிக்காக, சேர். கந்தையா வைத்தியநாதனதும், அவர் பாரியாரதும் தலைமையில் யாழ் - மனோகராப் படமாளிகையில் 30-6-62 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் இன்னிசைக் கச்சேரி ஒன்று நடாத்தப்படும்.

———

## மகா கும்பாபிஷேகம்

யாழ் திருநெல்வேலி ஸ்ரீ நீலாயதாட்சி சமேத, காயாரோகணேசப்பெருமான் கோவில் சீர்ணோத்தாரண மகாகும்பாபிஷேகம ஆனி மீ 25உ (9.7.62) திங்கட்கிழமை முற் பகல் 9 மணியளவில் வரும்சுபமுகூர்த்தத்தில நடைபெற இருக்கிறது.

———

## கம்பன் கவிதையில்

1-ம்பக்கத் தொடர்ச்சி

கேட்கும் இன்னேர் இடத்தை நோக்குவோம்.

பரதன் நாடாள வேண்டும் என்று வரங்கேட்ட கைகேசி அதே நேரத்தில் முறைமைப்படி முடிதரிக்க வேண்டிய இராமன் முடியிழப்பதோடு கடுங்கானம் சேர்ந்து வதிய வேண்டும என்றும் கல்நெஞ்சங்கொண்டு விடாப்பிடியாக, வரங்கேட்டு நிற்கையில் ஒரு புறம், தான் கொடுத்த வாக்கினை மீற முடியாமலும், மறுபுறம் தன் உயிரினும் மேலான இராமனைக் காட்டிற்கு அனுப்பி அல்லலுறுத்தும் கொடுமையைத் தானேசெய்ய ஒருப்படாமலும் தடுமாறித் தவித்துக் கலங்குகிருன் தசரதன். கலங்கி அவளது கருணைக்கு இரந்து நிற்கிருன,

"கண்ணே வேண்டும் எனினும்
ஈயக் கடவே னென்
உண்ணே ராவி வேண்டும்
எனினும் இன்றே உனதன்றே?
பெண்ணே வண்மைக் கைகயன்
மானே பெறுவாயேல்
மண்ணே கொள்நீ மற்றய
தொன்றும் மறவென்றுன்"

எனது கண்ணையே நீ கேட்டாலும் தருகிறேன். அதற்கு மேலான உயிரைக் கேட்டாலும் (அன்பு காரணமாக) இப்பொழுதுங்கூட உனதாகத்தானே இருக்கிறது. கொடையிற் சிறந்த கைகயன்மகளே பெற விரும்பினுல் மண்ணை மட்டும் கேள். மற்ற அந்த ஒன்றைமட்டும மறந்துவிடு, என்ற உருக்கமான வார்த்தைகள் மனித மனம் உள்ளவரை, அந்த மனத்தில் ஏற்படும் இரக்க உணர்சசி உள்ளவரை உயிர்பெற்று வாழும் என்பதற்கு ஐயமில்லை.

கம்பராமாயணத்தில் இவ்வாறு நாடக முறையில் உணர்ச்சியை வெளிப்படுத்தி நிற்கும் கவிதைகள் அனைத்துமே இவ்விதம் வாழும் வன்மைபெற்றுத் திகழ்கின்றன.

———

உ
சிவமயம்

## இலவச சமய தீட்சை

———:0:———

நிகழும் சுபகிருது ஞூ ஆனி மீ 24உ (8-7-62) சனிக்கிழமை காலை 8 மணிக்கு மண்டைதீவு பிள்ளையார் கோவிலிலும், ஆனி மீ 31 உ (15-7-62) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் யாழ். அரியாலை ஆனந்தம் வடலிரேட் ஞானவைரவர் கோவிலிலும் சிவஸ்ரீ. இ ஞானசேகரக்குருக்கள் அவர்கள் இலவச சமய தீட்சை செய்து வைப்பார்கள். சமயதீட்சை பெற்றுக்கொள்ள விரும்புகின்றோர், குறித்த தேவஸ்தானத்திற்குக் குறித்த நேரத்தில் ஆசார சீலர்களாக வந்து சேர்வார்களாக.

காரியதரிசி, அ. இ. பொ. சங்கம்,

## வாய்த் தவிடும் போனதா!



பெரியவர்: அநுரதபுரத்திலே தேர்தலில் நின்ற திரு. தலுவத்த சுதந்திரக்கட்சி வெற்றியடைந்தாற்சமாதானநீதிபதிப் பட்டத்தைத் தான் வீசியெறிந்துவிடுவதாகச் சொன்னரே அப்படிச் செய்தாரா?

விகடன்: பட்டம ஒட்டிக் கொண்டால் அவர் எப்படி வீச முடியும்? அடேப்பு நூர்ந்தாலும் வாய்த் தவிடாவது மிஞ்சவேண்டுமே.

## முருகன் பெருமை

(முதற்பக்கத் தொடர்ச்சி)

கொண்டதும்பற்றிய கதை பலரும் அறிந்ததே. வீட்டில் சகோதரர்கள் சண்டைபிடிப்பதுபோல் பிள்ளையாரும் முருகனும் சண்டைபிடிப்பது கதையானுலும் கருத்தைப் புலப்படுத்துகின்றது. 'அப்பாவும் வேண்டாம் அம்மாவும் வேண்டாம்' என்று கூறிச் சென்ற முருகன் பழநியில் வெறும் மொட்டைப்பையனுகக் காட்சியளித்தான்.

முருகனின் காலிலுள்ள கிண்கிணியின் ஒலி செவிக்கின்பமும் உள்ளத்திற்கு நிறைவும் தருவதாக அடியார் பாடியிருக்கின்றுர்.

———

## கதிர்காமப் பிரயாணம்

———

கதிர்காமப் பெருமானின் 7-ந் திருவிழா விவேகானந்த சபையின் ஆதரவில் சென்ற வருடம் தொடங்கி நடைபெறுகின்றது. இத்திருவிழா இவ்வருடம் ஆனிமாதம் 25-ந் திகதி 9-7 62 நடைபெறுகிறது. இத்திருவிழாவையொட்டிச் சபை ஓர் கதிர்காம யாத்திரையை அங்கத்தவர்களுக்கும், அன்பர்களுக்கும் குறைந்த செலவில் ஒழுங்கு செய்கிறது. ஞாயிறு 8-7 62 காலை கொழும்பில் இருந்து புறப்பாடு. செவ்வாய்க்கிழமை 10-7-62 இரவு கொழும்பு திரும்புதல்.

அன்பர்களும் அடியார்களும், அங்கத்தவர்களும் யாத்திரையில் பங்குபெற விரும்புவோர், செ இராசதுரை, செயலாளர், விவேகானந்த சபை, 34, விவேகானந்த மேடு. கொழும்பு. 5-7-62-ந் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

———

## நல்லூர் கந்தசுவாமி கோவிலில் கதிர்காமகால வழிபாடு

———

யாழ்ப்பாணம் நல்லூர்க்கந்த சுவாமி கோவிலில் கதிர்காமகால வழிபாடு ஆனிமாதம் 19—ம் திகதி செவ்வாய்க்கிழமை (3 - 7 - 62) முதல் ஆடி மாதம் 4—ம் திகதி வியாழக்கிழமை (19-7-62) வரையுள்ள 17 நாட்களும் சிறந்த ஒழுங்குகளுடன் நடைபெற இருக்கிறது.

"ஏறுமயிலேறி விளையாடுமுக மொன்றே" என்ற தொடக்கத்தையுடைய தேவாரத்தின் ஒவ்வொரு (4 சீர்) அடிபற்றி ஒவ்வொருவராக'அளவையூர்சஞ்சீவி' இரா. சிவ அன்பு, த. குமாரசாமிப்புலவர் போன்ற பலர் தனித்தனியே விழா நாட்களில் கதாப்பிரசங்கங்கள் நடாத்துவர்.

———

## தமிழ் எங்கள் ஆயுதம்

இன மொழி உரிமை கோரி ஈழத்தமிழ் மக்கள் திரண்டெழுந்து அறப்போர் நடாத்திய நாட்களில் ஈழத்துக் கவிஞர்களின் இதயக் குமுறல்களின் உருவகங்களாக வெளிவந்த கவிதைகள் பலவற்றை யாழ் தமிழ் எழுத்தாளர் சங்கம் தொகுதது தமிழ் எங்கள் ஆயுதம் என்றதலைப்பில் நூலாக வெளியிடுகிறது. இந் நூல் வெளியீட்டுவிழா நாளை சனிக்கிழமை (30-6-62) வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற இருக்கிறது.

மேற்படி எழுத்தாளர் சங்கம் அகிலஇலங்கைத தமிழ் எழுத்தாளர் மன்றம் ஒன்றை அமைப்பதற்கும், நாவலர் விபுலானந்தர், சோமசுந்தரப்புலவர் முதலிய தமிழறிஞர் தினங்களைக் கொண்டாடவும், பொதுமக்களைக்கொண்டாடச் தூண்டவும் ஏற்பாடுகள் செய்யத் தீர்மானித்துள்ளது.

நூல் வெளியீட்டு விழாவில் திரு. சி. ஸ்ரீநிவாசன் M. A. சு. இராஜநாகன் B. A, ஹரன் வித்துவான் க. ந. வேலன் ஆகியோர் திரு. தேவன் தலைமையில் உரைகள் நிகழ்த்துவர்.

———

## ஆண்டு விழா நிறைவேற்றம்

—:—

யாழ்-இளம் எழுத்தாளர் சங்கத்தின் முதலாண்டுவிழா சென்ற ஞாயிறு 24-6-62 ல் வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் சிறந்த முறையில் நடைபெற்றது. விழாவிற்கு ஏராளமான எழுத்தாளர்களும் வாசகர்களும் இரசிகர்களும் வருகைதந்தனர்.

———

## புதிய உற்சவ மூர்த்திகள் ஊர்வலம்

———

இன்று காலை உதய வேளையில் நல்லூர்க கந்தசுவாமி கோயில் முன்றலிலிருந்து, புதிய உற்சவ மூர்த்திகள், ஓமந்தை மருதோடைக கந்தசுவாமி கோவிலுக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுகின்றன இரவு பகலாகத் தொடர்ந்து சில தினங்களுக்கு இவ்வூர்வலம் நடைபெறும் என நம்பப்படுகிறது.

———